## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2025–2026

### மானியக் கோரிக்கை எண்: 12

## கேஆர். பெரியகருப்பன்
### கூட்டுறவுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2025

# பொருளடக்கம்


| இயல் எண். | தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1 | கூட்டுறவு – ஓர் அறிமுகம் | 1–7 |
| 2 | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 8–45 |
| 3 | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 46–64 |
| 4 | நுகர்வோர் கூட்டுறவுகள் | 65–80 |
| 5 | உணவு பாதுகாப்பில் கூட்டுறவு | 81–94 |
| 6 | கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 95–101 |
| 7 | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 102–103 |
| 8 | கூட்டுறவுத் தேர்தல் | 104–108 |
| 9 | வளர்ச்சிப் பாதை | 109 –111 |

## இயல் – 1

## கூட்டுறவு

### 1.1. அறிமுகம்

ஐக்கிய நாடுகள் சபை 2025–ஆம் ஆண்டை சர்வதேச கூட்டுறவு ஆண்டாக அறிவித்து கூட்டுறவு அமைப்புகளின் முக்கியத்துவத்தை உலகறியச் செய்துள்ளது.

2025 சர்வதேச கூட்டுறவு ஆண்டு

"நல்லுலகை கட்டமைக்கும் கூட்டுறவு"

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025, "நல்லுலகைக் கட்டமைக்கும் கூட்டுறவு" என்ற கருப்பொருளைக் கொண்டு அனைவரையும் உள்ளடக்கிய நிலையான பொருளாதார

வளர்ச்சியை ஊக்குவிப்பதில் கூட்டுறவு அமைப்புகள் வகிக்கும் முக்கியப் பங்கைக் காட்டுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (**sustainable development goals**) அடைய கூட்டுறவு அமைப்புகள் முக்கியக் காரணிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சமத்துவம் பேணுதல், வறுமையை ஒழித்தல் என உலகம் எதிர்கொண்டுள்ள மிக முக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் கூட்டுறவு நிறுவனங்கள் ஆற்றிவரும் பங்கை உலகறியச் செய்வது சர்வதேச கூட்டுறவு ஆண்டின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டம் முதலில் 1904–ஆம் ஆண்டு இயற்றப்பட்டவுடன் நாட்டின் முதல் கூட்டுறவு கடன் சங்கம் தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டம், திரூரில் தொடங்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு நோக்கங்கள் கொண்ட கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது.

நம் நாட்டின் கூட்டுறவு இயக்கத்திற்கு வழிகாட்டும் விதமாக தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பல்வேறு முன்முயற்சிகளை எடுத்து வருகின்றன.

கூட்டுறவு இயக்கங்கள் இல்லா துறையே இல்லையெனும் அளவிற்கு பல்வேறு விதமான கூட் றவு நிறுவனங்கள் உள்ளபோதிலும், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கீழ்க்கண்ட பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. கூட்டுறவு கடன் சங்கங்கள்
2. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்
3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
4. சிறப்பு நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்
5. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலம் நடத்தப்படும் உறுப்பினர் கல்வி, பணியாளர் பயிற்சி, பொது விழிப்புணர்வு மற்றும் கல்வி நிறுவனங்கள்

கூட்டுறவு நிறுவனங்களின் சேவைகள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் தமிழக அரசால் தொடர்ந்து திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1.2. நிருவாக அமைப்பு

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர், துறையின் செயலாளராக உள்ளார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் துறைத் தலைவர் ஆவார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் மாநில அளவிலான அலுவலர்கள் ஆவார்கள். அவர்கள் நுகர்வோர் பணிகள், நிதி மற்றும் வங்கியியல், சந்தைப்படுத்தல், திட்டம் மற்றும் வளர்ச்சி, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், தேர்தல் போன்ற செயல்பாடுகளை கவனித்து கொள்கின்றனர்.

மாவட்ட அளவிலான அலுவலர்களான கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்கள்,

**தலைமை அலுவலகத்தில்** நிதி மற்றும் வங்கியியல், நுகர்வோர் கூட்டுறவு, சட்டம் மற்றும் பயிற்சி, சட்டம் மற்றும் கண்காணிப்பு மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்கள் தலைமை அலுவலக மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாட்டை கண்காணித்தல் மற்றும் புதிய சங்கங்களை பதிவு செய்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொவிதி) பொது விநியோக திட்டத்தின் செயல்பாடுகளைக்

கவனிக்கிறார். மேலும், கூட்டுறவு சார் பதிவாளர்கள், பொது விநியோக திட்டப் பணிகளையும் கூட்டுறவு நிறுவனங்களின் பிற செயல்பாடுகளையும் கண்காணித்து வருகின்றனர்.

**1.3 கூட்டுறவு நிருவாகக்குழு அமைப்பு**

தொடக்க கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரை சங்க உறுப்பினர்களால் நேரடியாக சங்க தேர்தல் மூலம் நிருவாகக்குழுவினர் தேர்வு செய்யப்படுவார்கள். மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, அதன் உறுப்பினர்களான தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளிலிருந்து (Delegates) முறையே சங்க தேர்தல் மூலம் நிருவாகக்குழுவினர் தேர்வு செய்யப்படுவார்கள்.

தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக்குழு உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கை 11. அவற்றில் பட்டியலினத்தவர் (SC) / பழங்குடியினர் (ST)–2, மகளிர் – 3, பொது–6. மத்திய மற்றும்

தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக்குழு உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கை 21. அவற்றில் பட்டியலினத்தவர் (SC) / பழங்குடியினர் (ST)–4, மகளிர் – 6, பொது – 11 என்ற ஒதுக்கீட்டின் படி தேர்வு செய்யப்படுகின்றனர்.

# இயல் – 2

## கூட்டுறவுக் கடன் அமைப்பு

### 2.1. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்:

ஒரு கூட்டுறவு வங்கி / சங்கம் என்பது அதன் உறுப்பினர்களுக்குச் சொந்தமான நிதி சார்ந்த நிறுவனம் ஆகும். அவற்றின் உறுப்பினர்களே அதன் உரிமையாளர்களும் வாடிக்கையாளர்களும் ஆவர். இவை பெரும்பாலும் பொதுவான நோக்கம் உள்ள ஒரே பகுதியைச் சேர்ந்த மக்கள் அல்லது ஒரே வகையான தொழிலில் ஈடுபடுபவர்களால் நிறுவப்படுகின்றன.

பொருளாதரத்தின் நலிவடைந்த பிரிவினர் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் மேம்படுத்துவதற்காகவும் அதிக வட்டி விகிதத்தில் கடன்களை வழங்கும் கந்து வட்டிக்காரரர்களின் பிடியிலிருந்து நலிவடைந்த பிரிவினரைப் பாதுகாப்பதற்காகவும் கூட்டுறவு கடன் நிறுவனங்கள், உருவாக்கப்பட்டுள்ளன. ஒத்துழைப்பு, ஜனநாயக முடிவெடுத்தல், நிருவாகம், சுய உதவி, தன்னார்வம்

மற்றும் திறந்த உறுப்பினர் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் நிதித் தேவைகளை நியாயமான வட்டி விகிதத்தில் பூர்த்தி செய்வதன் மூலமும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலமும், அதிக வட்டி வசூலிக்கும் தனியார் கடன் வழங்குபவர்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் பிடியிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதில் கூட்டுறவு கடன் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், பொதுமக்களிடையே சேமிப்பு மற்றும் முதலீடு செய்யும் பழக்கத்தை ஊக்குவிக்கின்றது.

## 2.2. கூட்டுறவு கடன் சங்கங்களின் வகைகள்:

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஊரக மற்றும் நகர்ப்புற கூட்டுறவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. குறுகிய காலக் கூட்டுறவு கடன் அமைப்புகள் (PACCS, FSCS & LAMPS) மற்றும் நீண்ட கால கூட்டுறவு கடன் அமைப்பு (PCARDB) என ஊரகக் கடன் சங்கங்கள்

மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புற கூட்டுறவுகளில் நகர கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயக் கடன் சங்கங்கள் என மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை நகர்ப்புற மக்கள் மற்றும் அரசு / பொது மற்றும் தனியார் துறை ஊழியர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் மட்டுமே பொது மக்கள் எளிதில் அணுகக்கூடிய நிதி நிறுவனங்களாகும்.

**2.3. குறுகியக் கால கூட்டுறவு கடன் அமைப்பு:**

குறுகியக் கால கூட்டுறவு கடன் அமைப்பு என்பது கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று அடுக்கு அமைப்பாகும். இந்த கூட்டுறவு நிறுவனங்கள் சிறு மற்றும் குறு விவசாயிகள்

மற்றும் வேளாண்சாரா பொதுமக்களுக்கும் கடன் வழங்கும் நிறுவனங்களாகும்.

## 2.4. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி (TNSACB):

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, 1905–ஆம் ஆண்டு நவம்பர் மாதம், நகர கூட்டுறவு வங்கியாக தனது வணிகத்தைத் தொடங்கியது. தற்போது சென்னையில் 51 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1983–இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) ஆகியவற்றின் விதிமுறைகளைப் பின்பற்றி செயல்படுகிறது.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வணிக நடவடிக்கைகளில் இந்த வங்கி ஒரு கலங்கரை விளக்கமாகச் செயல்படுகிறது. இவ்வங்கி இந்தியாவில்

நூற்றாண்டு கண்ட முதல் மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

தலைமைக் கூட்டுறவு வங்கியால் பராமரிக்கப்படும் பல்வேறு நிதிகளில், தொடக்கக் கூட்டுறவுகளின் மேம்பாட்டு நிதி (PCDF), வேளாண் கடன் நிலைப்படுத்தல் நிதி (ACSF) மற்றும் வைப்பு உத்தரவாத நிதி (DGF) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொடக்கக் கூட்டுறவுகளின் மேம்பாட்டு நிதி, தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் இதர நிதித் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது, வேளாண் கடன் நிலைப்படுத்தல் நிதி (ACSF) தடையற்ற கடன் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது, வைப்புத்தொகை உத்தரவாத நிதி (DGF) எதிர்பாராத சூழ்நிலைகளால் வைப்புத்தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலைகளில் வைப்புத்தொகையாளர்களுக்கு அவற்றைத் திருப்பிச் செலுத்த உதவுகிறது. இதனால்,

கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, வேளாண் மற்றும் வேளாண் சாராக் கடன்களை வழங்குவதில் குறிப்பிடத்தக்க பங்காற்றுவதுடன், பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கான குறுகிய காலக் கடன்கள் (STSAO), பண்ணை சார்ந்த மத்திய காலக் கடன்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான நடைமுறை மூலதனக் கடன் வழங்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு காசுக்கடன்களை வழங்குகிறது. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கூட்டமைப்பு அடிப்படையில் கடன்களை வழங்குகிறது.

26.11.2024 அன்று புது தில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய கூட்டமைப்பு (NAFSCOB) விருது வழங்கும் விழாவில்,

100 ஆண்டுகளுக்கும் மேலாக குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நடவடிக்கைகளில் சிறந்த செயல்திறனுக்கான விருதை தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி பெற்றது.

**கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகள்:–**

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | ஆண்டு | பங்கு மூலதனம் | மாநில அரசு பங்கு | வைப்புகள் | வங்கி பெற்ற கடன் |
|---|---|---|---|---|---|
| 1 | 2021–2022 | 494 | 20 | 12,820 | 13,530 |
| 2 | 2022–2023 | 540 | 20 | 12,487 | 16,376 |
| 3 | 2023–2024 | 611 | 20 | 11,517 | 16,968 |
| 4 | 2024–2025 (31.01.2025 வரை) | 827 | 20 | 12,023 | 18,544 |

### 2.5. மத்திய கூட்டுறவு வங்கிகள்:

மத்திய கூட்டுறவு வங்கிகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை செயல்பாட்டுப் பகுதிகளாகக் கொண்ட தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களின் கூட்டமைப்புகளாகும். சேலம் மத்திய

கூட்டுறவு வங்கி 06.01.1909–இல் நிறுவப்பட்ட முதல் மத்திய கூட்டுறவு வங்கி ஆகும். தற்போது, தமிழ்நாட்டில் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இவை இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கியால் வழங்கப்படும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மூலம் பெறப்படும் மறுநிதி மற்றும் தங்கள் சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு, பங்கு மூலதனம், காப்பு நிதி மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்காக நிதியுதவி அளிக்கின்றன. தமிழ்நாட்டின் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள், தமது 933 கிளைகள் மூலமாக பொதுமக்களுக்கு பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றன.

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள், பொதுத் துறை வணிக வங்கிகளுக்கு இணையாக உடனடி கட்டண சேவை (IMPS), தானியங்கி வங்கி இயந்திரம் (ATM), ரூபே

அட்டைகள் (Rupay Cards), ஒருங்கிணைந்த கட்டண முறை (UPI), காசோலை சரிபார்ப்பு முறை (CTS), ஆதார் அடிப்படையிலான பணம் வழங்கும் சேவைகள் (AEPS), சிறிய தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலம் சேவை (Micro ATM), நிகழ்நேர மொத்த தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (RTGS / NEFT), பணமோசடி தடுப்பு முறை(AML system), இணைய வங்கியியல் சேவை (Net Banking), அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking), விரைவு தகவல் குறியீடு (QR code) அடிப்படையிலான பணப் பரிமாற்ற சேவை போன்ற நவீன வங்கியியல் வசதிகளை வழங்கி வருகின்றன.

சமீபத்தில் 26.11.2024 அன்று புது தில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய கூட்டமைப்பு (NAFSCOB) விருது வழங்கும் விழாவில், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கடன் மற்றும் வங்கி சேவையில் 100 ஆண்டுகள் நிறைவு பெற்றமைக்கு சான்றிதழ் பெற்றுள்ளது.

**கடந்த மூன்று ஆண்டுகளில் மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள்:–**

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | ஆண்டு | பங்கு மூலதனம் | மாநில அரசு பங்கு | வைப்புகள் | வங்கிகள் பெற்ற கடன் |
|---|---|---|---|---|---|
| 1 | 2021–2022 | 1,721 | 62 | 35,759 | 12.355 |
| 2 | 2022–2023 | 1,898 | 62 | 39,754 | 13,330 |
| 3 | 2023–2024 | 2,261 | 63 | 41,100 | 18,011 |
| 4 | 2024–2025 (28.02.2025 வரை) | 2,445 | 62 | 42,695 | 21,788 |

## 2.6. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்:

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் என்பவை அவற்றின் வரையறுக்கப்பட்ட செயல்பாட்டு எல்லைக்குள் வசிக்கும் உறுப்பினர்களின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்களாகும். 225 கிளைகளைக் கொண்ட 4,456 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 12,620 கிராமப் பஞ்சாயத்துகளை உள்ளடக்கி, விவசாயம் மற்றும் விவசாயம் சாராத

நடவடிக்கைகளுக்கு மக்களுக்குக் கடன் வழங்குகின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய அடையாளமாகும். ஏனெனில் அவை அனைத்து கிராமப்புற மக்களுக்கும் கடன் உட்பட அனைத்து வகையான சேவைகளையும் வழங்குகின்றன. அவை நிர்வாகத்துடன் சங்கத்தின் உறுப்பினர்களை இணைப்பதன் மூலம் ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் செயல்படுகின்றன. நலிவடைந்த பிரிவினர், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் பட்டியலின / பழங்குடியின விவசாயிகளின் பல்வேறு கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், உரம் மற்றும் வேளாண் இடு பொருட்கள் விற்பனை, நியாய விலைக் கடைகள், மருந்தகங்கள், பெட்ரோல்–டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள், வேளாண் சேவை மையங்கள், வேளாண் மருந்தகங்கள் நடத்துதல் எனக் கடன் அல்லாத சேவைகளையும் வழங்குகின்றன.

26.11.2024 அன்று புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய கூட்டமைப்பு (NAFSCOB) விருது வழங்கும் விழாவில், மதுரையில் உள்ள பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் 2022–23 ஆம் ஆண்டின் சிறந்த செயல்திறனுக்காக மூன்றாவது பரிசைப் பெற்றது.

**2.6.1. அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களையும் இலாபம் ஈட்டும் சங்கங்களாக மாற்றுதல்:**

மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணைப்புச் சங்கங்களாக நடப்பு ஆண்டு நட்டத்தில் செயல்பட்டு வந்த சுமார் 2000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை, அவற்றின் நிதி நிலையை மேம்படுத்தும் நோக்கில் தாய் சங்கங்களான மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

i. "உறுப்பினர் ஆதரவு திட்டம்" மூலம் வட்டி தள்ளுபடி, குறைந்த வட்டியிலான கடன்கள், கூட்டு முயற்சிகள்,

ii. பல்சேவைத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் கடன் வழங்குதலை அதிகரித்தல்,

iii. உறுப்பினர்களிடமிருந்து வைப்புத்தொகையை வசூலிப்பதற்கான நிபந்தனைகளை தளர்த்துதல்.

இதனால், கடந்த நான்கு ஆண்டுகளில் நட்டத்தில் செயல்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 2000–லிருந்து 950 ஆகக் குறைந்துள்ளது. 2025–26 நிதியாண்டு இறுதிக்குள் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும் லாபம் ஈட்டும் சங்கங்களாக மாற்றப்படும்.

**விவசாயிகளின் மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள்:**

**2.7. விவசாயி கடன் அட்டை – பயிர்க் கடன்:**

**விவசாயி கடன் அட்டை** திட்டத்தின் கீழ் 7% வட்டியில் பயிர் சாகுபடிக்கான செலவுகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் குறுகிய

கால பயிர்க் கடன்களை வழங்குகின்றன. குத்தகைதாரர்கள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. அரசு விவசாயிகளின் வட்டிச் சுமையை ஏற்பதால், உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகள் கடனுக்கான வட்டியை செலுத்த வேண்டியதில்லை. மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சாகுபடிப் பரப்பைப் பொறுத்து பயிர் வாரியான கடன் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் கடன் இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி ரூ.2 இலட்சம் வரை பிணையம் இல்லாமலும் ரூ.3 இலட்சம் வரை பிணையம் பெற்றும் வழங்கப்படுகின்றன. பயிர்க் கடன் ரொக்கம் மற்றும் பொருள் பகுதியான உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் விதைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

கூட்டுறவுத் துறையின் வரலாற்றில் முதல்முறையாக, பயிர்க் கடன் வழங்குதல்

2023–24ஆம் ஆண்டில் ரூ.15,000 கோடி மைல்கல்லைத் தாண்டி ரூ.15,543 கோடி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2024–25ஆம் ஆண்டில், 17,37,460 விவசாயிகளுக்கு ரூ.15,692 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**2.8. விவசாயி கடன் அட்டை – கால்நடை வளர்ப்பு கடன்கள்:**

விவசாயிகளின் நடைமுறை மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (PACCS) 2021 முதல் கால்நடை வளர்ப்பு கடன் திட்டத்தின்கீழ் கால்நடை பராமரிப்பிற்கு 7% வட்டியில் கடன்களை வழங்குகின்றன. உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை. அவ்வட்டி அரசால் கூட்டுறவு வங்கிகளுக்கு திருப்பிச் செலுத்தப்படுகிறது. கால்நடை பராமரிப்பிற்கான நடைமுறை மூலதனக் கடனுக்கான அதிகபட்ச கடன் வரம்பு KCC–க்கான

ஒட்டுமொத்த வரம்பான ரூ.3 இலட்சத்திற்குள் ரூ.2 இலட்சமாகும்.

2023-24ஆம் ஆண்டில், ரூ.2,407 கோடி கால்நடை பராமரிப்புக் கடன்களைப் பெற்றதன் மூலம் 4,53,305 விவசாயிகள் பயனடைந்தனர், மேலும், 2024-25ஆம் ஆண்டில், ரூ.2,645 கோடி கடன்களைப் பெற்றதன் மூலம் 4,43,734 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள்:**

**2.9. சுய உதவிக்குழுக்களுக்கான கடன்கள்:**

சுய உதவிக்குழு (SHG) இயக்கம் பல ஆண்டுகளாக ஏழை எளிய மக்களுக்கு கடன் உதவி வழங்குவதோடல்லாமல் மகளிருக்கு சமூக அதிகாரமளிப்புக்கான இயக்கமாகவும் வளர்ந்துள்ளது. குறிப்பாக கிராமப்புற பெண்களிடையே வறுமையைக் குறைப்பதற்கான அரசின் கொள்கை முடிவுகளில் இது ஒரு முக்கிய அங்கமாகும்.

சுய உதவிக்குழுக்களுக்கான கடன் உதவியின் அளவை அதிகரிக்கும் பொருட்டு, 2020-2021-ஆம் ஆண்டில் சுய உதவிக்குழுக்களுக்கான அதிகபட்ச கடன் வரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாகவும், 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இக்கடன் வரம்பு 2024-2025ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 2023-24ஆம் ஆண்டில், 76,871 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.4,875 கோடி அளவிலான சுய உதவிக்குழு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2024-25-ஆம் ஆண்டில், 53,757 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.4,063 கோடி அளவிலான சுய உதவிக்குழு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2.10. ஆதரவற்ற விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்குக் கடன்கள்:**

சமூக–பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்தவும், நிதி சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை அளிக்கவும், கூட்டுறவு நிறுவனங்கள் விதவைகள் / ஆதரவற்ற பெண்களுக்கு 5% குறைந்த வட்டியில் கடன்களை வழங்குகின்றன.

2023–24ஆம் ஆண்டில், 5,843 விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ரூ.23 கோடி கடன்களைப் பெற்று பயனடைந்துள்ளனர். 2024–25ஆம் ஆண்டில், 5,923 விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ரூ.26 கோடி கடன்களைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

**2.11. மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள்:**

மாற்றுத்திறனாளிகளின் நிலையை மேம்படுத்த, கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் போது வட்டி வசூலிக்காமல் வட்டியில்லாக் கடன்களை வழங்குகின்றன. இது மாற்றுத்திறனாளிகளின்

இடர்களைக் குறைத்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் சமூக மற்றும் உளவியல் மறுவாழ்வை ஊக்குவிக்கிறது.

2023–24ஆம் ஆண்டில், 12,874 மாற்றுத்திறனாளிகள் ரூ.62 கோடி கடன்களைப் பெற்று பயனடைந்தனர், 2024–25ஆம் ஆண்டில், 12,672 பயனாளிகளுக்கு ரூ.65 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2.12. தமிழ் மகள் திட்டம்:**

குடும்பத்திற்காக அயராது உழைக்கும் பெண்களைச் சிறப்பிக்கும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் மாதாந்திர உதவித்தொகையைப் பெறுவதற்காக 8 இலட்சத்து 35 ஆயிரம் வங்கிக் கணக்குகள் மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட தொகையில் ஒரு சிறுபகுதி, அவர்களது சுய விருப்பத்தின் பெயரில் 'தமிழ் மகள்' எனப்படும் தொடர் வைப்புத் திட்டத்தின் கீழ் வைப்பு

செய்யப்படுகிறது, இதனால் ஆண்டு இறுதிக்குள் கணிசமான தொகை வட்டியுடன் கிடைக்கும், இது குடும்பத்தின் கல்விக் கட்டணம், புத்தகங்கள், அவர்களின் குழந்தைகளுக்கு உடை போன்ற செலவுகளைச் சமாளிக்க உதவும், இது இந்தத் திட்டத்தின் மறைமுகப் பயனாகும். மத்திய கூட்டுறவு வங்கிகளில் 31,928 'தமிழ் மகள்' தொடர் வைப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

**2.13. நாட்டுப்புற கலைஞர் கடன்:**

இக்கடன் நாட்டுப்புற கலைஞர்களின் நிதி மற்றும் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2023–24ஆம் ஆண்டில், 2,018 நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.8 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2024–25ஆம் ஆண்டில், 2,447 நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.11 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.14. சிறகுகள் திட்டம்:**

சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள திருநங்கைகள் அடிப்படை கடன் வசதிகளை பெறுவதில் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். எனவே, திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், 5% என்ற குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.1,00,000 வரை கடன் வழங்கும் "சிறகுகள் திட்டம்" நவம்பர் 2024–இல் தொடங்கப்பட்டது.

28.02.2025 நிலவரப்படி 101 திருநங்கைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.84 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**அரசுத் திட்டங்கள்:**

**2.15. பயிர்க் கடன் தள்ளுபடி 2021:**

2021ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட KCC பயிர்க் கடன் தள்ளுபடி திட்டத்தை செயல்படுத்த, மாநில அரசு ரூ.4,200 கோடியையும், வட்டித் தொகை

ரூ.176 கோடியையும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு (NABARD) விடுவித்துள்ளது.

மேலும், 2021–22 நிதியாண்டிலிருந்து 2024–25 வரை, கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக ரூ.7,180 கோடியை தள்ளுபடியாகவும், கூட்டுறவு நிறுவனங்களுக்கான நிலுவையில் உள்ள தள்ளுபடிக்கான வட்டியாக ரூ.1,643 கோடியையும் விடுவித்துள்ளது.

**2.16. நகைக் கடன் தள்ளுபடி திட்டம் 2021:**

தகுதியான ஏழை எளிய மக்கள் நகைக் கடன் தள்ளுபடியால் பயனடையக்கூடிய வகையில், ஒரு குடும்பத்திற்கு 40 கிராம் வரையிலான நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. இதன்படி சுமார் ரூ.4,918 கோடி மதிப்புள்ள நகைக் கடன்கள் 11,83,091 பயனாளிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன, இப்பயனாளிகளுக்கு நகைக் கடன் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**2.17. மகளிர் சுயஉதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி திட்டம் 2021:**

பெண்களுக்கான பொருளாதார அதிகாரமளித்தலை ஊக்குவிப்பதற்காக, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூ.2,117 கோடி கடனை மாநில அரசு தள்ளுபடி செய்துள்ளது, இதன் மூலம் 1,01,897 குழுக்களைச் சேர்ந்த 10,56,298 மகளிர் உறுப்பினர்களுக்கு பலன்கள் கிடைத்துள்ளன.

**2.18. வேளாண் சாராத கடன்கள் மற்றும் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் 2023:**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான கடன்களை வழங்குகின்றன. கடன் பெற்றவர்களின் வட்டிச் சுமையைக் குறைக்கவும், நீண்டகால நிலுவைத் தொகையை வசூலிப்பதன் மூலம் கூட்டுறவு சங்கங்களின் நிதி நிலையை வலுப்படுத்தவும்

சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் 2023 முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

**2.19. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS):**

பட்டியலின / பழங்குடியின தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS) தமிழக அரசால் 01.04.2023 முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், தொழில்முனைவோர் தங்கள் தொழிலைத் தொடங்க அல்லது மேம்படுத்த பெறும் கடன்களுக்கு மூலதன மானியம் வழங்கப்படுகிறது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கான கடன்களுக்கு வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் 86 தொழில்முனைவோருக்கு 52 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட வாகனங்களை 06.12.2024 அன்று

சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

**2.20. புதிய தொழில்முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS):**

முதல் தலைமுறை தொழில்முனைவோர் சொந்தத் தொழில்களைத் தொடங்க ஊக்குவிப்பதற்கு தமிழ்நாடு அரசால் புதிய தொழில்முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், மூலதன மானியம் மற்றும் கடன்களுக்கான வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 13 தொழில்முனைவோருக்கு ரூ.8 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.21. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி:–**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் முதன்மையான நோக்கம்

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் வைப்புத் தொகையை திரட்டுதல் ஆகும். தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை அவற்றின் வளர்ச்சிக்காக ஆய்வு செய்து கண்காணித்து வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நோக்கமானது மண்டல அளவிலும், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலும் நகைக்கடன் வணிகத்தை அதிகரிப்பதாகும். 2024-25-ஆம் நிதி ஆண்டில் வைப்புத் தொகையாக நிலுவை ரூ.321 கோடி மற்றும் நகைக் கடன் நிலுவைத் தொகை ரூ.1,507 கோடி ஆகும்.

**தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் செயல்பாடுகள் (முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பீடு)**

**(ரூ.கோடியில்)**

| ஆண்டு | வைப்புத் தொகை நிலுவை | கடன் நிலுவை |
|---|---|---|
| 2021-22 | 196 | 833 |
| 2022-23 | 202 | 924 |
| 2023-24 | 215 | 1121 |
| 2024-25 | 321 | 1507 |

**2.22. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்:-**

மாநிலத்தில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப் பெறாத

நிலையில் இவ்வங்கிகள் தங்களிடம் உள்ள நிதியிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்தும் பெறப்படும் கடன்களிலிருந்து மட்டுமே நகை அடகு கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. 2024–25–ஆம் நிதி ஆண்டில் வைப்புத் தொகை நிலுவை ரூ.163 கோடி மற்றும் நகைக் கடன் தொகை நிலுவை ரூ.1,416 கோடி ஆகும்.

**தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகள் (முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பீடு)**

**(ரூ.கோடியில்)**

| ஆண்டு | வைப்புத் தொகை நிலுவை | கடன் நிலுவை |
|---|---|---|
| 2021–22 | 72 | 813 |
| 2022–23 | 82 | 935 |
| 2023–24 | 99 | 1,070 |
| 2024–25 | 163 | 1,416 |

## 2.23. நகர கூட்டுறவு கடன் அமைப்பு

மாநில அளவில், தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் கூட்டமைப்பும், மாவட்ட அளவில் நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்களும் நகர கூட்டுறவு கடன் அமைப்பின் முக்கிய கூறுகளாக விளங்குகிறது. நகர மற்றும் புறநகர பகுதிகளில் வசிக்கும் மக்களின் அனைத்து நிதி கடன் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அவை செயல்பட்டு வருகின்றன.

## 2.24. தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் இணையம்:

தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் இணையமானது 1988ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தமிழ்நாட்டின் நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களை மேம்படுத்தும் நோக்கத்தினை முதன்மையாக கொண்டு செயல்பட்டு வருகின்றது. தற்போது நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கன

நாணய மற்றும் கடன் சங்கங்களும் இணையத்தின் உறுப்பினராக சேர்க்கப்படுகின்றன. நாளது தேதிவரை 125 நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் 1 நகர கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் 4 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள் இணையத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளன. இணையம், உறுப்பினர் வங்கிகள் / சங்கங்கள், சிறந்த மேலாண்மை நடைமுறைகளை செயல்படுத்திடவும், பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளித்திடவும், நவீன வங்கி தொழில் நுட்பங்களை செயல்படுத்திடவும் உதவி புரிந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளும், இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு உட்பட்டு செயல்படுவதற்கான ஒரு வழிகாட்டும் அமைப்பாக இணையம் செயல்பட்டு வருகிறது. மேலும், அனைத்து உறுப்பினர் வங்கிகளிலும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை உறுதி செய்யும் பொருட்டு மைய வங்கி தீர்வுகளை (CBS) செயல்படுத்துவதில்

இணையத்தின் திட்ட கண்காணிப்பு குழு முக்கிய பங்கு வகிக்கிறது. இணையம் அனைத்து உறுப்பினர் வங்கிகளின் பங்களிப்புகளை தொகுத்து, நகர கூட்டுறவு வங்கிகள் மேம்பாட்டு நிதி (UCBDF) என்ற நிதியினை உருவாக்கி அதன் மூலம் நலிவடைந்த நகர கூட்டுறவு வங்கிகளுக்கு, அவற்றின் தேவையான மூலதன விகிதத்தினை அடைந்திட உதவி செய்து வருகிறது.

### 2.25. நகர கூட்டுறவு வங்கிகள்

நகர மற்றும் புறநகர பகுதிகளில் வசிக்கும் மக்களின் அனைத்து வங்கி மற்றும் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், மாநிலம் முழுவதும் 126 நகர கூட்டுறவு வங்கிகள் 190 கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய காஞ்சிபுரம் நகர கூட்டுறவு வங்கி 08.10.1904 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் நகர கூட்டுறவு வங்கியாகும். இவ்வங்கிகள் பொது மக்களிடமிருந்து திரட்டப்படும் வைப்புத்தொகையினை கொண்டு மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி

செய்யும் பொருட்டு வீட்டுக் கடன், வணிகக் கடன் மற்றும் நகைக் கடன்கள் போன்ற பிற பண்ணை சாரா கடன்களை வழங்கி வருகின்றன.

இவ்வங்கிகளால் 2023–24–ஆம் நிதியாண்டில் 8,31,981 உறுப்பினர்களுக்கு ரூ.7,949 கோடி அளவுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2024–25–ஆம் ஆண்டில் 31.03.2025 வரை 8,22,976 உறுப்பினர்களுக்கு ரூ.8,581 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் நகர கூட்டுறவு வங்கிகள், சிறு வணிகர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கி சமூக மேம்பாட்டிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. 2023–2024ஆம் ஆண்டில் சுமார் 18,714 சிறு வணிகர்கள் மற்றும் 12,891 சுய உதவிக் குழு தனிநபர்கள் நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் பயனடைந்துள்ளனர்.

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கி சேவைகளை வழங்கும் பொருட்டு, நகர கூட்டுறவு வங்கிகள் தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கி மற்றும் கடன் சங்கங்களின் இணையத்தின் வழிகாட்டுதலுடன் மைய வங்கி தீர்வுகளை செயல்படுத்தி வருகிறது.

**நகர கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள்**

**(ரூ. கோடியில்)**

| நிதி ஆண்டு 2024-25 | உறுப்பினர்கள் | பங்கு மூலதனம் | நிலுவையில் உள்ள வைப்புத் தொகை | நிலுவையில் உள்ள கடன் |
|---|---|---|---|---|
| 31.03.2025 | 18,97,522 | 364 | 10,317 | 6,837 |

**2.26. நகர கூட்டுறவு கடன் சங்கங்கள்**

வளர்ந்து வரும் நகரமயமாக்கலால், நகர மற்றும் புறநகர பகுதிகளில் வசிக்கும் மக்களின் மாறிவரும் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, அந்த பகுதிகளில் செயல்பட்டு வந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு கடன்

சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டது. அவ்வகையில், தற்போது தமிழ்நாட்டில் 119 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் 150 கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம் நகர கூட்டுறவு கடன் சங்கம், 05.02.1922 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் நகர்ப்புற கூட்டுறவு கடன் சங்கமாகும்.

இச்சங்கங்கள் பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகையினைத் திரட்டி, சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் நடுத்தர வருமானக் குழுவைச் சேர்ந்த நபர்களுக்கு வீட்டுவசதி, வணிகம் மற்றும் பிற பண்ணை சாரா நடவடிக்கைகளுக்காகக் கடன்களை வழங்கி வருகின்றன.

இச்சங்கங்கள், 2023–2024ஆம் ஆண்டில், 2,56,754 உறுப்பினர்களுக்கு ரூ.2,133 கோடி கடன்களை வழங்கியுள்ளன. 2024–2025ஆம் ஆண்டில் 31.03.2025 வரை, 3,12,766 உறுப்பினர்களுக்கு ரூ.2,985 கோடி கடன்கள்

வழங்கப்பட்டுள்ளன. இதில், நகர்ப்புறங்களில் உள்ள சிறு வணிகர்களுக்கு ரூ.8 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**நகர கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள்**

(ரூ. கோடியில்)

| நிதியாண்டு 2024-25 | உறுப்பினர்கள் | பங்கு மூலதனம் | நிலுவையில் உள்ள வைப்புத்தொகை | நிலுவையில் உள்ள கடன் |
|---|---|---|---|---|
| 31.03.2025 | 4,37,333 | 58 | 1974 | 2,092 |

## 2.27. பணியாளர் கூட்டுறவுச் சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 1,695 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள் மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் முதன்மை நோக்கம் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் நியாயமான வட்டி விகிதத்தில் அவர்களுக்கு கடன்கள் வழங்குவதும் ஆகும். இச்சங்கங்கள் 31.03.2025 அன்றுள்ளபடி 9,63,512 உறுப்பினர்களுடன் ரூ.2,545 கோடி உறுப்பினர்

பங்குதொகை மற்றும் ரூ.15,235 கோடி நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நிரந்தர வைப்புத்தொகை மற்றும் சிக்கன வைப்புத்தொகையாக ரூ.5,812 கோடி வசூலித்துள்ளன. இச்சங்கங்களால் 2024-2025ஆம் ஆண்டில் 31.03.2025வரை ரூ.12,347 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.28. இ- சேவை மையங்கள்:

அரசின் சேவைகளை பொது மக்களுக்கு, குறிப்பாக தொலை தூரங்களிலுள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு தமிழகமெங்கும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களில் 4,448 இ-சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இ-சேவை மையங்களில் சாதிச்சான்று, வருமானச் சான்று, பிறப்பு / இறப்புச் சான்று, பட்டா / சிட்டா, இன்ன பிற சான்றிதழ்களை பெறுவதற்கான சேவைகள்

வழங்கப்படுகின்றன. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், திருமண உதவித் திட்டம் போன்ற சமூக நலத்துறையால் வழங்கப்படும் உதவி திட்டங்களை பெறுவதற்கான சேவைகளும் வழங்கப்படுகின்றன. இத்துடன் மின்கட்டணம் செலுத்துதல், நகர்ப்புறங்களில் சொத்துவரி, குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துதல் போன்ற அரசு கட்டணங்களை செலுத்துவதற்கான சேவைகளும் வழங்கப்படுகின்றன. மேலும் ஆயுள் காப்பீட்டு தவணைத் தொகை செலுத்துதல், மின்னணு பயணச்சீட்டு பதிவு செய்தல் போன்ற பல தனியார் துறை சேவைகளையும் இம்மையங்கள் பொது மக்களுக்கு வழங்கி வருகின்றன. இவ்வாறு அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், குறித்த காலத்தில் வழங்கப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு அரசு அலுவலகங்களை நாடி செல்வதால் ஏற்படும் கால விரயமும், பொருட் செலவும் பெருமளவு

குறைக்கப்படுகிறது. வெளிப்படையான முறையில் சேவைகள் அளிக்கப்படுவதால் மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையும் பெருகியுள்ளது. மக்கள் இச்சேவை மையங்களை அணுகி பயன் பெற்று வருகின்றனர்.

தற்போது CSC மற்றும் e–Governance Services India Ltd., தேசிய நிதி பரிவர்த்தனை நிறுவனம் (NPCI) உடன் இணைந்து ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட Digi Pay சேவைகளான பணம் எடுத்தல், இருப்பு விசாரணை, பணபரிமாற்றம் மற்றும் பணம் செலுத்துதல் போன்ற சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

2024–2025–ஆம் நிதிஆண்டில் இ–சேவை மையங்களில் 35,11,018 சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களில் ரூ.12 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## இயல்–3

### கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

தமிழ்நாட்டில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இரண்டடுக்கு அமைப்பாகச் செயல்படுகின்றன. மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும், வட்ட அளவில் 115 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல இணையமாக செயல்பட்டு வருகிறது. இதர மாவட்டங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் தலைமைச் சங்கமாக செயல்பட்டு வருகிறது.

## 3.1. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED) :

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 1959ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 18 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு உரம் மற்றும் இதர இடுபொருட்களை மொத்தமாக விநியோகம் செய்து வருகிறது. மாநிலத்தின் இராசாயன உர விநியோகத்தில் 25 சதவீத பங்களிப்பினை வழங்கி, விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை இருப்பு வைத்து விநியோகிப்பதை இணையம் உறுதி செய்கிறது.

கலப்பு உர அலகு 1971ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகிலுள்ள பாமணியில் நிறுவப்பட்டது. இதில் குருணை வடிவிலான கலப்பு உரங்கள் தயாரிக்கப்பட்டு "பாமணி" என்ற வர்த்தக பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சராசரியாக

நாள் ஒன்றுக்கு 150 மெ.டன் கலப்பு உரம் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் கலப்பு உர அலகுகள் மதுரை, வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைந்துள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தொழுஉரத்தினை பெரு நகர சென்னை மாநகராட்சியிடமிருந்தும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிடமிருந்தும் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு நியாயமான விலையில் இணையம் விநியோகித்து வருகிறது. பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை வழங்கிட, திண்டுக்கல் மாவட்டத்தில் எரியோட்டில் நுண்ணூட்டச் சத்து கலப்பு உர அலகு 2021 முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வலகு மூலம் நெல், வாழை, கரும்பு, தேங்காய் மற்றும் காய்கறிகளுக்கான நுண்ணூட்டச் சத்து கலப்பு உரம் "பாமணி" என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு வருகிறது. எரியோடு கலப்பு உர அலகு

மூலம் வேப்பம் புண்ணாக்கு, வேப்பந்தூள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லி மற்றும் உயிரி உரங்கள் தயாரித்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது. 2024–25–ஆம் நிதி ஆண்டில் ரூ.3 கோடி மதிப்புள்ள தரமான விதைகள் மற்றும் ரூ.838 கோடி மதிப்புள்ள 4,67,464 மெ.டன் மதிப்புள்ள உரங்களை விவசாய உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராகத் தமிழ்நாட்டில் செயல்படுவதுடன், விவசாய விளைபொருட்களை ஆதரவு விலைத் திட்டத்தில் கொள்முதல் செய்து வழங்கும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையம், வேளாண் விளைபொருட்களான, துவரம் பருப்பு, வெங்காயம் மற்றும் தேங்காய் போன்றவற்றின் விலை ஏற்றத்தினை கட்டுப்படுத்தும் சந்தை குறுக்கீட்டாளராக செயல்பட்டு விலை

ஏற்றத்தினை கட்டுப்படுத்தி வருகிறது. இவ்விணையம் இந்திய எண்ணெய் கழகத்தின் உரிமம் பெற்று 9 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை அலகுகளையும் நடத்தி வருகிறது.

**3.2. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் :**

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் 1941ல் துவக்கப்பட்டு, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 12 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல இணையமாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையம் மேற்படி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு உரம் மற்றும் வேளாண் உபகரணங்களை விநியோகித்தும், உறுப்பினர்களுக்கு நகைக்கடன் வழங்கியும் செயல்பட்டு வருகிறது. இவ்விணையம் மொத்தம் 6,600 மெ.டன் கொள்ளளவு கொண்ட 11 கிடங்குகளை செயல்படுத்தி வருகிறது. 2024–2025–ஆம் நிதி

ஆண்டில் இவ்விணையத்தின் மொத்த வணிகம் ரூ.154 கோடியாகும்.

### 3.3. கூட்டுறவு வர்த்தக செயலி (Co–op Mart App) :

மின்னணு வர்த்தக செயலியானது கூட்டுறவு தயாரிப்புக்களான தேன், சமையல் எண்ணெய், மஞ்சள் பொடி, மசாலா பொருட்கள், சிறுதானியம், மாவு மற்றும் உயிரி உரங்கள் ஆகியவற்றை இணைய வழியில் விற்பனை செய்வதற்காகவும், நேரடியாக பொது மக்களுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 3.4. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (APCMS):

மாநிலம் முழுவதும் 115 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்திடவும், வேளாண் உற்பத்தியினை அதிகரித்திட உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு

நியாயமான விலையில் விற்பனை செய்வதையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், விவசாய உறுப்பினர்கள் தங்களின் வேளாண் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஏதுவாக ஏலக் கூடங்கள், உலர் களங்கள், கிடங்குகள், உற்பத்தி அலகுகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அளித்து வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் முதன்மைச் சங்கங்களாகச் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன. மேலும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மொத்த புரள் வணிகம் ரூ.4,591 கோடி ஆகும்.

**3.5. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வணிகச் செயல்பாடுகள்**

**(i) வேளாண் விளைபொருள் விற்பனை**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாய உறுப்பினர்களை வணிகர்களுடன் ஒன்றிணைத்து, அவர்களது உற்பத்தி பொருட்களை நியாயமான விலையில் வெளிப்படைத் தன்மையுடன் விற்பனை செய்ய வழிவகை செய்யும் தளமாக செயல்பட்டு வருகிறது. 2024–25–ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.1,009 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்தியுள்ளன.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் கடன் வசதியினைப் பெறும் விவசாயிகள், விளைபொருட்களை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ஆதாய விலைக்கு விற்பனை செய்து இலாபம்

ஈட்டுவதுடன், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களால் வழங்கப்பட்டுள்ள கடனை உறுப்பினர்களிடம் வசூலிக்கவும் வழிவகை செய்கின்றன. 2024–25–ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.9 கோடி அளவிற்கு கடன் வசூலித்துள்ளது.

### (iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு

2024–25–ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்து ரூ.135 கோடி மதிப்பிலான மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அத்தியாவசிய மளிகை பொருட்கள், கூட்டுறவு தயாரிப்புகள். காய்கறிகள் விற்பனை செய்ய பல்பொருள் அங்காடிகளையும் நடத்தி வருகிறது. பொது மக்கள் பயனடையும் வகையில் தள்ளுபடி விலையில்,

மருந்துகளை விற்பனை செய்ய மருந்தகங்களையும நடத்தி வருகிறது.

**(iv) தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்**

வேளாண் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காத போது வேளாண் விளைபொருட்களை கிடங்குகளில் சேமித்து வைத்து சாதகமான சந்தை சூழ்நிலையின் போது ஆதாய விலைக்கு விற்பனை செய்ய ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. 2024-25-ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.133 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன்களை வழங்கியுள்ளன.

**(v) பதனிடுதல் மற்றும் வேளாண் விளைப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் அரிசி ஆலை, பஞ்சாலை,

பருப்பு உலர்கலன் அலகு, மிளாகாய் அரவை அலகு, எண்ணெய் பிழியும் அலகு போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பதனிடும் அலகு மூலம் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி வேளாண் உற்பத்தி பொருட்களை விவசாயிகளுக்கு ஆதாய விலையை தரும் பணியை செய்கின்றன. அரிசி, பருப்பு, மஞ்சள் தூள், மசாலா பொருட்கள் மற்றும் எண்ணெய் வகைகள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் தயாரிக்கப்பட்டு அர்த்தநாரீஸ்வரா, மங்களம், மருதம், அமிர்தம் பசுமை, முல்லை, ஆரூரான், திருவதிகை, ஆழியார், வைகை, துணை, தில்லை நடராஜா, பென்னாகரம், பத்மகிரீஸ்வரர், அறுசுவை, முருகா மற்றும் மதுரம் என்ற வர்த்தகப் பெயர்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

### 3.6. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS)

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1935இல் ஆரம்பிக்கப்பட்டு, நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம்

நகராட்சிக்கு உட்பட்ட பகுதியை செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் மற்றும் பெரும்பாலான மலைவாழ் பழங்குடியினரின் விளைபொருள்களை உறுப்பினர்களுக்கு ஆதாய விலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் விளை பொருட்களை சந்தைப்படுத்துவதோடு, வேளாண் இடுபொருட்களை வழங்குதலையும் தனது முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு ஏல விற்பனைக் களம் ஒன்றையும் மற்றும் மேட்டுப்பாளையத்தில் கலப்பு உரம் தயாரிக்கும் அலகையும் நிறுவி செயல்படுத்தி வருகிறது. நீலகிரியில் விளையும் பயிர்களின் தேவைகளுக்கேற்ப உரக்கலவை தயாரிக்கும் நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது. 2024–25–ஆம் ஆண்டில் சங்கத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.162 கோடி ஆகும்.

### 3.7. பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில் 39 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு செயல்பட்டு வருகின்றன. மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு வேளாண் இடுபொருட்கள் விநியோகம், வேளாண் உற்பத்தியினை மேம்படுத்துதல், வேளாண் விளை பொருட்கள் கொள்முதல் குறிப்பாக சிறுதானியங்கள், அவர்களுக்கான கிடங்கு வசதியினை ஏற்படுத்துதல் மற்றும் பதனிடும் அலகுகளுக்கான கட்டமைப்பை உருவாக்குதல், அவர்களது வருவாயைப் பெருக்கும் வகையில், கடன் வசதிகளை ஒருங்கிணைத்து வழங்குதல் மற்றும் பழங்குடியினர்களுக்கு பொதுவிநியோகத்திட்ட அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்தல் போன்ற சேவைகளை செய்து வருகிறது. 1958ஆம் ஆண்டில் முதல் பெரும்பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் அமைக்கப்பட்டது. இதுவே

தமிழ்நாட்டில் மிகப்பெரிய பெரும்பல நோக்கு கூட்டுறவுச்சங்கமாகும். பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்பட்டு பதப்படுத்தப்படும் பொருட்களில் சத்தியமங்கலம் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முல்லைத் தேன், கொல்லிமலை பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஓரிலேண்ட் காபி மற்றும் மிளகு ஆகியவை பிரபலமான பொருட்கள் ஆகும். 2024-25-ஆம் ஆண்டில் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.438 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளன.

மாநிலத்தில் உள்ள 39 பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கிடவும், ஒருங்கிணைத்திடவும், மாநில அளவில் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான இணையம் 01.11.2022 முதல் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.8. சேமிப்புக் கிடங்குகள்

விவசாயிகள் அறுவடை காலத்தில் விளைபொருட்களை சேமித்து வைத்து நியாயமான விலையில் விற்க ஏதுவாக கூட்டுறவு நிறுவனங்களில் பயன்பாட்டில் உள்ள 5,45,800 மெ.டன் கொள்ளளவு கொண்ட 4,045 கிடங்குகள் மூலம் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகின்றன.

2024-25ஆம் ஆண்டில், 4,630 விவசாயிகள் ரூ.343 கோடி மதிப்புள்ள 89,804 மெட்ரிக் டன் விவசாய விளைபொருட்களை ஈடாக வைத்துள்ளனர். இவர்களுக்கு ரூ.216 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. ரூ.171 கோடி மதிப்புள்ள விளைபொருட்களை வாடகைக்கு வைத்து 7,912 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2024-25ஆம் ஆண்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு கிடங்கு கட்டப்பட்டு வருகிறது.

### 3.9. கிடங்கு மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்தல்

1,349 நேர்மறை நிகர மதிப்புள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில், 1,173 கிடங்குகள் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தில் (WDRA) பதிவு செய்யப்பட்டுள்ளன. 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான கிடங்குகளைப் பதிவு செய்ததற்காக தமிழ்நாட்டிற்கு கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் விருது கிடைத்துள்ளது.

### 3.10. கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு மாவட்ட அச்சகங்கள் 12,000 உறுப்பினர்களுடன் ரூ.3 கோடி பங்குத் தொகையுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த அச்சகங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சிடும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. அரசு, அரசு அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும்

தனிநபர்களிடமிருந்து அச்சிடும் பணிகளையும் மேற்கொள்கின்றன. 2024-25-ஆம் ஆண்டில் ரூ.67 கோடி புரள்வணிகம் செய்யப்பட்டுள்ளது.

### 3.11. தனி வகைக் கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாட்டில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் தனி வகை கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. இந்த சங்கங்கள் ஒரே தொழில்/வணிகம் போன்றவற்றில் ஈடுபடும் உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் குறிப்பிட்ட நோக்கங்களுடன் தொடங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கூட்டுறவு அருந்தகங்கள் | 14 |
| 2 | உப்பு உற்பத்தியாளர் மற்றும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 09 |
| 3 | முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 05 |
| 4 | சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் | 01 |

| | | |
|---|---|---|
| 5 | தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 63 |
| 6 | பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் | 03 |
| 7 | வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 04 |
| 8 | சுகாதாரக் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 9 | உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 10 | தமிழ்நாடு கழிவுத்தாள் சேகரிப்போர் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 11 | தமிழ்நாடு ஓவியர்கள் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 12 | சி.எம்.டி.ஏ, கோயம்பேடு வணிக வளாக தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் கூட்டுறவு சேவைச் சங்கம் | 01 |
| 13 | தமிழ்நாடு மாநில கணக்குகள் மற்றும் வரிகள் சேவைகள் கூட்டுறவு சங்கம் | 01 |
| 14 | மதுரை நகர ரிக்க்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 15 | பூந்தமல்லி கால்நடை தீவன உற்பத்தி மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 01 |
| 16 | திருச்சிராப்பள்ளி மாவட்ட உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கம் | 01 |

| | | |
|---|---|---|
| 17 | டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் சர்வீஸ் கூட்டுறவுச் சங்கம் லிட்., | 01 |
| 18 | தமிழ்நாடு கிரின் எனர்ஜி சர்வீஸ் கூட்டுறவுச் சங்கம் லிட்., | 01 |
| 19 | வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் மேலாண்மை கூட்டுறவு சங்கம் | 01 |
| 20 | தமிழ்நாடு மருந்தாளுநர் கூட்டுறவு சேவை சங்கம் லிட்., | 01 |
| 21 | நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் | 26 |
| 22 | குத்தகைதாரர் கூட்டுறவு பண்ணைச் சங்கங்கள் | 11 |
| 23 | நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள் | 11 |
| 24 | காய்கறி வளர்ப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 02 |
| 25 | பண்ணைக் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 26 | உழவர் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனங்கள் | 95 |
| 27 | டியூகாஸ் | 01 |
| மொத்தம் | | 259 |

## இயல்–4

## நுகர்வோர் கூட்டுறவுகள்

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பினை கொண்டுள்ளது. இந்தியாவில் முதல் நுகர்வோர் கூட்டுறவு சங்கமான திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் 1904ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் தேதி தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. நுகர்வோர் கூட்டுறவுகள் தரமான நுகர்வுப் பொருட்களை நியாயமான விலையில் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளிச்சந்தையில் உள்ள நுகர்வுப் பொருட்களின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி பொதுமக்களுக்கு சேவை செய்து வருகின்றன.

**மாநில அளவில்**
**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

↓

**மாவட்ட அளவில்**
**மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (45)**

↓

**தொடக்க நிலை**
**தொடக்க கூட்டுறவு பண்டகசாலை (320)**

**செயல்பாடுகள்**

**4.1 தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF)**


தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 1996 ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் தேதி தொடங்கப்பட்டது. இது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் தலைமை

நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. அதிகமாக விற்பனையாகக் கூடிய (FMCG) நுகர்பொருட்கள், காகிதம் மற்றும் எழுதுபொருட்கள் உள்ளிட்ட பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து தேவைக்கேற்ப இணைப்புச் சங்கங்களுக்கு விற்பனை செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டு எரிபொருள் விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகின்றது.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கென அதிகமாக விற்பனையாகக் கூடிய நுகர்பொருட்களை (FMCG) சலுகை விலையில் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, ஜூலை 2009 முதல் இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுகின்றது. கூட்டுறவு நிறுவனங்களின் பட்டாசு கொள்முதல் பணியினையும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைத்து செயல்படுகிறது. தமிழ்நாடு நுகர்வோர்

கூட்டுறவு இணையம் முதன் முறையாக பிப்ரவரி 2022 முதல் மருந்து மையக்கொள்முதல் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

2023–24ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ரூ.84.64 கோடி அளவிற்கு வணிகம் செய்துள்ளது. சென்ற நிதியாண்டில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ரூ.90.57 கோடி அளவிற்கு மொத்த வணிகம் செய்துள்ளது.



## 4.2 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மளிகைப்பொருட்கள், பருப்பு வகைகள், தானிய வகைகள் மற்றும் மசாலா வகைகள் உள்ளிட்ட நுகர்வு பொருட்களை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுகொள்முதல் குழு மூலமாக நேரடியாக மொத்தமாக கொள்முதல் செய்து நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது.


தமிழ்நாட்டில் தற்போது 45 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், மாவட்ட அளவில் செயல்படுகின்றன. மாநிலம் முழுவதும் விரிந்துள்ள 45 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளால் 24 பல்பொருள் அங்காடிகள், 209 சிறுபல்பொருள் அங்காடிகள், 13 சில்லறை விற்பனை நிலையங்கள், 51 சுயசேவை பிரிவுகள், 136 கூட்டுறவு மருந்தகங்கள்,

49 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 25 எரிபொருள் விற்பனை நிலையங்கள், 26 சமையல் எரிவாயு உருளை விநியோக அலகுகள், 3,461 நியாய விலைக்கடைகள் மற்றும் 80 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் ஒரு மத்திய கூட்டுக்கொள்முதல் குழு மற்றும் 4 கூட்டுக்கொள்முதல் குழுக்கள், சென்னை, மதுரை, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் மளிகைப் பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வதன் மூலம் இலாபகரமான விலையின் பயனை (price advantage) உறுப்பினர்களுக்கு வழங்கி அதன் மூலம் குறைந்த விலையில் பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பொது விநியோகத் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்திட முதன்மை சங்கமாகவும்

மற்றும் சுய எடுப்பு சங்கமாகவும் செயல்பட்டு தேவைப்படும் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்கின்றன.

2023–24ஆம் ஆண்டில் ரூ.1,360.13 கோடி அளவிற்கு அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும் வணிகம் மேற்கொண்டுள்ளது. சென்ற நிதியாண்டில், அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் ரூ.1,476.61 கோடி அளவிற்கு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



### 4.3 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்:

தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் மூன்றாம் நிலையில் செயல்பட்டு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.

1919 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலை தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட முதல் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலை ஆகும். தமிழ்நாட்டில் செயல்படும் 320 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளானது 51 மருந்தகங்கள், 19 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 5 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 3 அரவை அலகுகள், 12 பல்பொருள் அங்காடிகள், 11 சுயசேவை பிரிவுகள் மற்றும் 1,792 நியாய விலைக் கடைகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

## நுகர்வோர் கூட்டுறவுகளின் விற்பனை செயல்பாடுகள்

(ரூ.கோடியில்)

| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் வகை | கட்டுப்பாட்டுப் பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. | | கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. | | மொத்த விற்பனை மதிப்பு ரூ. | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2023-24 | 2024-25 | 2023- 24 | 2024-25 | 2023- 24 | 2024-25 |
| 1 | மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் | 832.65 | 720.25 | 1360.13 | 1476.61 | 2192.78 | 2196.86 |
| 2 | தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் | 147.79 | 151.63 | 333.47 | 318.98 | 481.26 | 470.61 |


## 4.4 கூட்டுறவு மருந்தகங்கள்

தமிழ்நாடு அரசு தரமான மருந்துகளை குறைவான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக மாநிலம் முழுவதும் முக்கியமான இடங்களில் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் கூட்டுறவு மருந்தகங்களை தொடங்கியுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 132 அம்மா மருந்தகங்கள் மற்றும் 248 கூட்டுறவு மருந்தகங்கள் செயல்படுகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்

16.12.2021 அன்று ஒரேமாதிரியான நிறம், தனித்துவமான சின்னம் மற்றும் பெயர்ப் பலகைகளுடன் கூடிய 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இம்மருந்தகங்கள் மூலம் 2023-24ஆம் ஆண்டில் ரூ.162.74 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டது. சென்ற நிதியாண்டில், ரூ.161.65 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு மருந்தகங்களில் வாடிக்கையாளர்களுக்கு 20% வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. 2023-24ஆம் ஆண்டில் ரூ.24.98 கோடி மதிப்பில் 29,30,860 வாடிக்கையாளர்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. சென்ற நிதியாண்டில், ரூ.29.89 கோடி மதிப்பில் 28,13,906 வாடிக்கையாளர்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது.




## 4.5 மைய மருந்து கொள்முதல்

கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் கூட்டுறவு மருந்தகங்களுக்கான மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்யும் பொழுது அதிக விளிம்புத் தொகை கிடைக்க ஏதுவாக மைய மருந்து கொள்முதல் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மைய மருந்து கொள்முதலுக்குத் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமானது, Apex, Ajanta, USV,

Torrent, Cipla, Glenmark, Dr.Reddy's, Sun Pharma, FDC pharma, Biocon, Zydus Health care, Mediclone Biotech, Servier, Abbott (I) Ltd., Abbott Healthcare Ltd., Knowhatt, IPCA மற்றும் IMPCOPS ஆகிய 18 மருந்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனங்கள் குறைந்தபட்சம் 38% வரை தள்ளுபடி வழங்குகின்றன. மையமருந்து கொள்முதல் திட்டத்தின் மூலம் மார்ச் 2025 வரை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.3.21 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**4.6 சந்தை குறுக்கீடு நடவடிக்கை**

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான சூழல் மற்றும் தேவை ஏற்படும்போது நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீடு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. 2023-24ஆம் நிதி ஆண்டில் தக்காளி மற்றும் வெங்காயத்தின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த

கூட்டுறவுத் துறையால் சந்தை குறுக்கீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சந்தைகளில் தக்காளி வரத்து குறைந்ததால் ஒரு கிலோவிற்கு விலை ரூ.100 எட்டியது. சந்தை குறிக்கீட்டு நடவடிக்கையாக பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் மூலம் தக்காளி ஒரு கிலோ ரூ.60–க்கு விற்கப்பட்டது.

### 4.7 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்

அரசு தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குச் சத்தான காலை உணவு வழங்கும் நோக்கத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

சென்ற நிதியாண்டில், ரூ.37.17 கோடி மதிப்பிலான 2,265 மெட்ரிக் டன் இருமுறை

வறுக்கப்பட்ட ரவை, 1,939 மெட்ரிக் டன் கோதுமை ரவை மற்றும் 2,299 மெட்ரிக் டன் சேமியா ஆகியவை நுகர்வோர் மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் 28,397 அரசு தொடக்க பள்ளிகளில் பயிலும் 15,41,040 மாணவர்களுக்கு சுவையான காலை உணவு தயாரிப்பதற்கு தடையின்றி விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது இத்திட்டமானது அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**4.8 முதல்வர் மருந்தகம்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதில் தரமான மூலக்கூறு மருந்துகள், பிராண்டட் மருந்துகள், சர்ஜிக்கல்ஸ், நியூட்ராசூட்டிகல்ஸ் மற்றும் இந்திய மருந்துகளை குறைந்த விலையில் பொதுமக்களுக்கு 75% வரை தள்ளுபடியுடன் விற்பனை செய்யப்படுகிறது.

முதல்வர் மருந்தகங்களுக்கு ஜெனிரிக் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் கொள்முதல் செய்து வழங்கப்படுகிறது. பிராண்டட் மருந்துகள், சர்ஜிக்கல்ஸ், நியூட்ராசூட்டிகல்ஸ் மற்றும் இந்திய மருந்துகள் மையக் கொள்முதல் மூலமாக தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென சென்னை சாலி கிராமத்தில் மைய மருந்து கிடங்கும், மாவட்ட அளவில் 38 மருந்து கிடங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, www.mudhalvarmarundhagam.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.136, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஏ1) துறை, நாள் 12.11.2024–இல் முதல்வர் மருந்தகங்கள் அமைக்கும் தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கான அரசு மானியம் ரூ.30 கோடி நிதி

அனுமதிக்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியானவர்கள் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தகுதியான அனைத்து தொழில்முனைவோர்களுக்கு ரூ.3.00 இலட்சமும் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.2.00 இலட்சமும் உட்கட்டமைப்பு ஏற்படுத்தவும், மருந்துகள் வாங்கவும் அரசு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. முதல்வர் மருந்தகங்கள் மூலம் மார்ச் 2025 வரை, 2,71,684 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். மேலும், ரூ.1.43 கோடி மதிப்புள்ள மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் ரூ.40.89 இலட்சம் அளவிற்கு தள்ளுபடியும் அளிக்கப்பட்டுள்ளது.

## இயல்–5

## உணவுப் பாதுகாப்பில் கூட்டுறவு

### 5.1. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் மற்றும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்

தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை (PDS) வெற்றிகரமாக செயல்படுத்தி, இந்தியாவில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கிய மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. மாநிலம் முழுவதும் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுவிநியோகத்திட்ட பொருட்களை திறம்பட விநியோகிக்க ஏதுவாக கூட்டுறவு சங்கங்களால் மொத்தம் 35,039 நியாயவிலை கடைகள் கீழ்கண்ட வகையில் நடத்தப்படுகின்றன.

- முழுநேர நியாயவிலை கடைகள் – 24,684
- பகுதி நேர நியாயவிலை கடைகள் – 10,355

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்ட

பொருட்கள் (துவரம் பருப்பு, பாமாயில்) ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TNCSC) மூலம் கொள்முதல் செய்யப்பட்டு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. இப்பொருட்கள் 105 முதன்மைச் சங்கங்கள், 354 சுயஎடுப்புச் சங்கங்கள் மற்றும் 4,156 இணைப்புச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

**பொது விநியோகத்திட்டத்தை செயல்படுத்தும் சங்கங்களின் வகைப்பாடு:**

| சங்கத்தின் வகை | சங்கங்களின் எண்ணிக்கை | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| முதன்மைச் சங்கங்கள் | 105 | 4,605 |
| சுயஎடுப்புச் சங்கங்கள் | 354 | 4,464 |
| இணைப்புச் சங்கங்கள் | 4,156 | 25,970 |
| மொத்தம் | 4,615 | 35,039 |

### 5.2. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் பங்கு

தமிழ்நாட்டில் உள்ள 35,039 கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் மூலம் 2.12 கோடி குடும்ப அட்டைதாரர்கள் சேவையைப் பெறுகின்றனர். நியாயவிலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்துடன் அரசு மானியத்துடன்கூடிய சிறப்பு பொது விநியோகத்திட்ட பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், ஊட்டி டீ, அரசு உப்பு, பனைவெல்லம், சிறுதானியங்கள், 5 kg. / 2 kg LPG சிலிண்டர்கள் போன்ற கட்டுப்பாடற்ற பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், 240 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மூலம் தகுதியுள்ள குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

### 5.3. நகரும் நியாயவிலைக் கடைகள்

தொலைதூரப் பகுதிகள், மலைப்பகுதிகள், ஆறுகள், நெடுஞ்சாலைகள் மற்றும் இதர இயற்கை இடர்பாடுகளால் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில்

உணவுப் பொருட்களை தடையின்றி தொடர்ந்து விநியோகம் செய்ய 2,494 நகரும் நியாயவிலைக் கடைகள் மாநிலம் முழுவதும் செயல்படுகின்றன. இதன் மூலம் பழங்குடியினரும், எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வசிப்பவர்களும் பயன்பெறுகின்றனர்.

**5.4. நியாயவிலைக்கடையில் பல வகையான பொருட்களின் விற்பனை**

நியாயவிலைக் கடைகளின் வருவாயை அதிகரிக்கும் வணிக நடவடிக்கைகள் பின்வருமாறு:–

**5.4.1. 5 கிலோ / 2 கிலோ LPG சிலிண்டர்கள் விற்பனை**

நியாயவிலைக் கடைகள் மூலம் 5 kg / 2 kg LPG (FTL) சிலிண்டர்களின் சில்லறை விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தெரு வியாபாரிகள் மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகளுக்கு பயனளிக்கிறது. குறிப்பாக, இந்த சிலிண்டர்களை வாங்குவதற்கு முகவரிச் சான்று தேவையில்லை. அக்டோபர் 2022

முதல் மார்ச் 2025 வரை ரூ.62.68 இலட்சம் மதிப்புள்ள LPG சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 5.4.2. சிறுதானியங்களின் விற்பனை

2021–22ஆம் ஆண்டிற்கான வேளாண் துறைக்கான நிதிநிலை அறிவிப்பினைத் தொடர்ந்து, உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்பினால் (FPOs) கொள்முதல் செய்யப்படும் சிறுதானிய அரிசி வகைகளான கேழ்வரகு, கம்பு, தினை, குதிரைவாலி, சாமை மற்றும் வரகு ஆகியவை நியாயவிலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு சில்லறை விற்பனை கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஜூன் 2022 முதல் மார்ச் 2025 வரை ரூ.2.58 கோடி மதிப்புள்ள சிறுதானியங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.4.3. பனைவெல்லம் விற்பனை

2021–22 வேளாண் துறைக்கான நிதிநிலை அறிவிப்பினைத் தொடர்ந்து, நியாயவிலைக் கடைகள் மூலம் பனைவெல்லம் விற்பனை செய்யப்படுகிறது.

அக்டோபர் 2021 முதல் மார்ச் 2025 வரை ரூ.1.93 கோடி மதிப்புள்ள பனைவெல்லம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.4.4. அரசு உப்பு விற்பனை

அயோடின் குறைபாடுகளைத் தவிர்க்க, அயோடின் கலந்த உப்பு தமிழ்நாடு உப்புக் கழகத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. சென்ற நிதியாண்டில் 21,403 மெட்ரிக் டன் அளவிலான அரசு உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.4.5. ஊட்டி டீ விற்பனை

"இண்ட்கோசர்வ்" நிறுவனம் மூலம் (The Tamil Nadu Small Tea Growers' Industrial Co-operative Tea Factories' Federation Limited) சிறுதேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலையினை கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள் மூலம் "ஊட்டி டீ" என்ற வணிகப் பெயரில் (Brand Name) பொதுமக்களுக்கு

விற்பனை செய்யப்படுகிறது. சென்ற நிதியாண்டில் 2,645 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.5. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை நவீனமயமாக்குதல்

#### 5.5.1. ISO தரச்சான்றிதழ்

நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைகளுக்கு தர மேலாண்மை தொடர்பான ISO:9001 தரச்சான்றிதழினையும், ISO:28000 தரச் சான்றிதழினையும் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 31.03.2025 வரை 10,149 நியாய விலைக் கடைகளுக்கு ISO:9001 சான்றிதழும், 2,059 நியாய விலைக் கடைகளுக்கு ISO:28000 சான்றிதழும் பெறப்பட்டுள்ளது.

**5.5.2. நியாயவிலைக் கடை உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்**

மாநிலம் முழுவதும் உள்ள நியாயவிலைக் கடைகளை பொலிவூட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு இது நாள் வரை 5,481 நியாயவிலைக் கடைகள் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

**5.5.3. புதிய நியாயவிலைக் கடைகளை திறத்தல்**

மாநிலம் முழுவதும் நியாயவிலைக்கடைகளை அணுகுவதற்கான வாய்ப்பினை அதிகப்படுத்தும் வகையில் மே 2021 முதல் மார்ச் 2025 வரை 789 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1,605 பகுதி நேர நியாய விலைக்கடைகள் உட்பட மொத்தம் 2,394 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**5.5.4. நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்கள் / கட்டுநர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்ட விவரம்**

2022–2023ஆம் ஆண்டில் 5,748 விற்பனையாளர்கள், 981 கட்டுநர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளது. தற்போது

2024–25ஆம் ஆண்டுக்கு 2,527 விற்பனையாளர்கள், 826 கட்டுநர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது.

### 5.5.5. வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைகளுக்கு புதிய அரசு கட்டிடங்கள் கட்டுதல்

தனியார் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 6,215 நியாயவிலைக் கடைகளுக்கு அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட அடையாளம் காணப்பட்டுள்ள மொத்தமுள்ள 2,571 இடங்களில், 1,749 இடங்களுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 1,040 நியாய விலைக்கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 709 இடங்களில்

கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

### 5.6. நியாயவிலைக்கடை கட்டட வடிவமைப்பு

புதிய நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு, பின்வரும் இரண்டு தனித்துவமான கட்டட வடிவமைப்புகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:–

1. 500க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு 440 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு நியாயவிலைக்கடை கட்டடம் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. 500க்கும் கூடுதலான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு 550 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு நியாயவிலைக்கடை கட்டடம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 5.7. பொது விநியோகத்திட்டத்தில் தொழில்நுட்ப மேம்பாடுகள்

- **மின்னனு – ஏல தளம் மூலம் காலிகோணி விற்பனை:** மின்னனு–ஏல தளம் மூலம் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் நோக்கத்தோடு, காலி சணல் கோணிகள், MSTC / NCDFI இணையதளத்தின் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றது.
- **விற்பனை முனைய இயந்திரம் (PoS Machine):** நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை முனைய இயந்திரம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்நடைமுறையின் மூலம் டிஜிட்டல் முறையில் நியாயவிலைக்கடை விற்பனை பதிவு செய்யவதோடு பொது மக்களின் அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தியில் அனுப்பப்படுகிறது. மேலும் அத்தியாவசியப் பொருட்களின் விற்பனை தவறாகப்

பயன்படுத்தப்படுவதைத் தடுக்க பயோமெட்ரிக் சரிபார்ப்புக்குப் பிறகு பொருட்கள் வழங்கப்படுகின்றன.

- **மின்னணு எடையிடும் இயந்திரம்**: குடும்ப அட்டைதாரர்கள் சரியான எடையில் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு ஏதுவாக, மின்னணு எடை தராசுகள் பயன்படுத்தப்படுகிறது.
- **நியாயவிலைக் கடைகளில் மின்னணு பரிவர்த்தனை (e-payment) வசதி**: நியாயவிலைக் கடைகளில் ஒருங்கிணைந்த பரிவர்த்தனை முறை (UPI) மூலம் பணபரிவர்த்தனை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.8. சமூக நலத்திட்டங்கள்

**பொங்கல் பரிசுத் தொகுப்பு 2025**: 2025-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு

முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 1.94 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

### 5.9. பொதுவிநியோகத்திட்ட மானியம்

நியாயவிலைக் கடைகளை நடத்துவதில் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யும் வகையில் அரசு மானியமாக கடந்த 4 நிதியாண்டுகளில் ரூ.2,195.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 5.10. பொது விநியோகத்திட்டத்தின் மூலமாக நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல்

ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (UN Sustainable Development Goals) அடைவதற்கு தமிழ்நாட்டின் அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தின் பங்களிப்பு குறிப்பாக :

- இலக்கு எண் 1 – வறுமையின்மை
- இலக்கு எண் 2 – பசியின்மை

- **இலக்கு எண் 3 – நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு**

**இந்தக் கொள்கை தமிழ்நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் சமூக நலத்திற்கான அடித்தளமாக தொடர்கிறது.**

# இயல்-6

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 6.1. முன்னுரை:

கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் திறன் மேம்பாட்டிற்கான கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சியினை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 38 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் 38 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் 17 தலைமை கூட்டுறவு நிறுவனங்களும் உறுப்பினர்களாக உள்ளன. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை பொது மக்களிடையே கொண்டு செல்லும் பொருட்டு, பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் ஏற்பாடு செய்து வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு சங்கங்களின் நிகர லாபத்திலிருந்து ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி

மற்றும் வளர்ச்சி நிதி (3%) மற்றும் கூட்டுறவு கல்வி நிதிக்கு (2%) கூட்டுறவு சட்டங்களின்படி வசூலிக்கப்படுகிறது. இந்நிதி கூட்டுறவுகள் பற்றிய ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு சங்கங்களால் வழங்கப்படும் பல்வேறு சேவைகள் பற்றிய தகவல்களைப் பகிர்வு செய்வதற்கும் சங்கங்களின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் "கூட்டுறவு" என்ற தமிழ் மாத இதழையும், "தமிழ்நாடு ஜெர்னல் ஆப் கோவாப்பரேஷன்" என்ற ஆங்கில மாத இதழையும், "கூட்டுறவு முரசு" என்ற மாதம் இருமுறை வெளியாகும் தமிழ் இதழையும் வெளியிட்டு வருகிறது.

இவ்விதழ்களில் தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து வகை கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த விவரங்களை வெளியிட்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், அனைத்து வகை கூட்டுறவு சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு மாவட்ட கூட்டுறவு

ஒன்றியங்களின் உதவியுடன் உறுப்பினர் கல்வித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம், மாநிலத்தில் உள்ள அனைத்து வகையான கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினரல்லாதவர்களுக்கும் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உறுப்பினர் கல்வித் திட்ட வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 6.2. மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்

ஒவ்வொரு மாவட்ட கூட்டுறவு ஒன்றியமும் அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் அனைத்து வகையான கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 38 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் உறுப்பினர் கல்வித் திட்டம், இளைஞர் ஈர்ப்பு முகாம், அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா மற்றும் வர்த்தக பொருட்காட்சி ஆகியவை மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்காக நடத்தப்படுகின்றன. கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு தொடர்பான கருத்தரங்கம், கூட்டுறவு கண்காட்சி,

நூலகம் பராமரித்தல், சட்டப்பூர்வ நிதிகள் வசூலித்தல் ஆகிய பணிகளை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் செயல்படுத்தி வருகின்றது. 38 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் பொது மக்களுக்கும், அரசுக்குமிடையே ஒரு மக்கள் தொடர்பு நிறுவனமாக செயல்பட்டு கூட்டுறவுத் துறையின் திட்டங்களையும், நோக்கங்களையும், செயல்பாடுகளையும் மக்களிடையே கொண்டு செல்கிறது.

**6.3. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள்**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக மாநிலத்தில் 27 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் 7 துணை பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் கூட்டுறவுத் துறை பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு கூட்டுறவு பட்டயப் பயிற்சியும் மற்றும் கூட்டுறவு நிறுவன பணியாளர்கள் பயன் பெறும்

வகையில் குறுகிய கால பயிற்சியும் வழங்கி வருகின்றன.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, தையற்கலை பயிற்சி, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, மின் பழுதுபார்த்தல் பயிற்சி, சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியையும் நடத்தி வருகிறது. இத்தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும்

மின்னணு பொறியியல் ஆகிய பட்டயப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

### 6.4. கூட்டுறவு பயிற்சி மற்றும் கல்வி

புதுதில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால், சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி மற்றும் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பும் (MBA) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நடத்தி வருகிறது. இக்கல்லூரியில் 14 பாடப்பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பில் மாணவர்கள் கல்வி பெறுகின்றனர். இக்கல்லூரிக்கு ரூ.76 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. தற்சமயம் இக்கல்லூரியினை அரசு நிதி

உதவி பெறும் கல்லூரியாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பாரதியார் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5 இலட்சம் வைப்புத் தொகை வைத்துள்ளது.

## இயல்–7

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கூட்டுறவு நிறுவனங்களின் பொருளாதார ஆற்றல் நிலையை வலுப்படுத்துதலை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டமானது கூட்டுறவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட முன்னுரிமை அளித்து வந்தது. இத்திட்டத்திற்கான நிதியினை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கடனாக மாநில அரசுக்கு வழங்கி வந்தது. இதனை மாநில அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு கடன் மற்றும் பங்குத்தொகையாக வழங்கியது. தமிழ்நாட்டில் 1989–இல் தொடங்கப்பட்டு இதுவரை 32 மாவட்டங்களில் ரூ.821.75 கோடி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடானது, கூட்டுறவுச் சங்கங்களை பல்நோக்கு நிறுவனங்களாக மாற்றி புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அடிமட்ட

நிலையிலிருக்கும் சங்கங்களில் சேமிப்புக் கொள்ளளவினை உயர்த்தியும், வணிக வருவாயினை மேம்படுத்தியும், செயலற்ற சங்கங்களை புத்துயிரூட்டியும், புதிய சேமிப்பு கிடங்கு கட்டடங்களை உருவாக்கியும் சீர் செய்தும், மனிதவள மேம்பாடு மற்றும் திறன் வளர்ச்சியினை ஏற்படுத்தியும் தரம் உயர்த்தியுள்ளது.

## இயல்–8

## கூட்டுறவுத் தேர்தல்

8.1. இந்திய அரசியலமைப்பு (97வது திருத்த) சட்டம், 2011 மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதி IX–Bல் உள்ள அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243ZKன்படி, கூட்டுறவு சங்கங்களின் தேர்தலை நடத்திட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983–இல் சேர்க்கப்பட்ட புதிய சட்டப்பிரிவு 33–Aன் கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது.

8.2. தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்பட துவங்கியது.

8.3. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983, சட்டப்பிரிவு 33(11) (b)ன்படி கூட்டுறவு சங்கத்தின் தேர்தல் அட்டவணை தயாரித்தல் மற்றும் அனைத்து தேர்தல் நடத்தப்படுவதை கண்காணித்தல், வாக்காளர்

பட்டியல் தயார் செய்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடு செய்திட தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்கள் தேர்தல் ஆணையத்திடம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

8.4. 2013–ஆம் ஆண்டில், 97வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2011ன்படி, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1983–இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், சமூக நீதிக்கு உத்தரவாதம் அளிக்கவும், கூட்டுறவு சங்கங்களின் நிருவாகக்குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

8.5. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள 18,805 கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில

கூட்டுறவு சங்கங்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது.

8.6. இதில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள 7,101 கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதில் 77,204 நிருவாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 7,049 நபர்கள் தலைவர்களாகவும் மற்றும் 7,047 நபர்கள் துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக் கொண்டனர். மேலும், இச்சங்கங்களுக்கு 2023–இல் ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவடைந்து செயலாட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

8.7. தற்போது தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் புதியதாக பதிவு செய்யப்பட்ட சங்கங்களையும் சேர்த்து 7,696 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.8. இச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்திட தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்பட்ட இரு நீதிப்பேராணை மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு, உறுப்பினர் பட்டியலை முழுமையாக சரிசெய்த பின்னரே தேர்தல் நடத்திட வேண்டும் என ஆணை வழங்கியது.

8.9. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க, அனைத்து கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் பட்டியலில் இருந்து இறந்த/தகுதியற்ற உறுப்பினர்களை நீக்குதல், ஆதார் மற்றும் குடும்ப அட்டை எண் சேர்க்கும் பணியானது போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

8.10. அதன்படி, 2024-25-ஆம் ஆண்டில் 7,696 கூட்டுறவு சங்கங்களில் உள்ள

1,20,08,468 மொத்த உறுப்பினர்களில் 79,36,282 (66%) உறுப்பினர்களின் ஆதார் மற்றும் குடும்ப அட்டை எண் சேகரிக்கப்பட்டு, மீதமுள்ள உறுப்பினர்களிடமும் விவரங்கள் சேகரிக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## இயல்–9

## வளர்ச்சிப் பாதை

கூட்டுறவு நூற்றாண்டுகளைக் கடந்து சீரும் சிறப்புமாக செயல்பட்டு காலத்திற்கு ஏற்ப தங்களைப் புதுப்பித்துக் கொண்டு பல்வேறு தரப்பு மக்களுக்கும் அனைத்து விதமான சேவைகளையும் வழங்கிவரும் ஓர் உன்னத அமைப்பாகும். தமிழ்நாடு அரசும் கூட்டுறவுகளைப் பலப்படுத்த பல்வேறு புதுமையான முன்னெடுப்புகளை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. அவற்றுள்,

1. தரமான மருந்துகள், சந்தையிலேயே மிகக் குறைந்த விலையில் ஏழை எளிய, நடுத்தர மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் 1,000 முதல்வர் மருந்தகங்கள்.

2. ஒளிவுமறைவற்ற வெளிப்படையான நிருவாகத்தை உறுதிசெய்ய, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு அமைப்புகளும் கணினிமயமாக்கம்.

3. வேளாண் இடுபொருட்கள் மட்டுமின்றி, உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான பிற சேவைகளையும் வழங்க தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் பல்நோக்கு சேவை சங்கங்களாக தரம் உயர்த்துதல்

4. மக்களுக்கு தரமான, கலப்படமற்ற பொருட்களை நியாயமான விலையில் வழங்க செயலாக்க அலகுகளை அமைத்தல்.

5. நட்டத்தில் செயல்படும் கூட்டுறவு அமைப்புகளே இல்லாத நிலையை உருவாக்க உறுப்பினர் உதவி திட்டத்தின் கீழ் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களையும் நிகர லாபம் ஈட்டும் அமைப்புகளாக தரம் உயர்த்துதல்.

6. புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் மூலமாக கூட்டுறவுகளில் தொடர் உட்கட்டமைப்பு வளர்ச்சி.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேசக் கூட்டுறவு ஆண்டு 2025-இன் கருப்பொருளுக்கு ஏற்ப,

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் தொடங்கி விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க் கடன் உள்ளிட்ட இடுபொருட்களை வழங்குவதுடன் அவர்களின் உற்பத்திக்கு நியாயமான விலை கிடைக்க உறுதிசெய்வதுடன், நுகர்வோருக்கும் தரமான பொருட்களை மலிவான விலையில் கிடைக்க செய்து "நல்லுலகை கட்டமைக்கும் கூட்டுறவாகத்" திகழ்ந்து வருகின்றன.

**கேஆர். பெரியகருப்பன்**
கூட்டுறவுத் துறை அமைச்சர்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 13.12.2024 அன்று மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கிய ஐந்து விருதுகளை காண்பித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வாழ்த்து பெற்றார்.

I




மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.11.2024 அன்று 71 வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் 'வேர்கள்', 'விழுதுகள்' மற்றும் 'சிறகுகள்' ஆகிய திட்டங்களை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.




மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.12.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடி திட்டம் மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டங்களின் கீழ் கடனுதவி பெற்று கொள்முதல் செய்யப்பட்ட கழிவுநீர் அகற்றும் வாகனங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களால் 09.01.2025 அன்று 2025 ஆம் ஆண்டு தை திருநாளை முன்னிட்டு, பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டம், சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் சைதாப்பேட்டை நியாய விலைக் கடையில், தொடங்கி வைக்கப்பட்டது.



ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் "மங்களம்" என்ற வர்த்தக பெயரில் தரமான மஞ்சள் தூள், மிளகாய் தூள், சாம்பார் பொடி, இட்லி பொடி, சிக்கன் மசாலா மற்றும் மட்டன் மசாலா உள்ளிட்ட மசாலா பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் (TANFED), மூலம் திண்டுக்கல் மாவட்டம் "எரியோட்டில்" மண்புழு உர உற்பத்தி அலகு தொடங்கப்பட்டுள்ளது.



கடலூர் மாவட்டம், சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் "தில்லை நடராஜா" என்ற வர்த்தக பெயரில் தரமான "அப்பளம்" உற்பத்தி செய்யப்பட்டு நியாய விலை கடைகள் மூலம் 50 கிராம் பாக்கெட் ரூ.12/- என்ற விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது.

VIII



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின், கொங்கணாபுரம் கிளையில் உள்ள 37,976 சதுர அடி பருத்தி ஏல விற்பனை கூடத்தில் நடைபெறும் ஏல விற்பனை.

IX

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.